பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ [illegible]: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' – A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் [illegible]

மலர்: 20] சென்னை: ஆனி 20 (3—7—72) திங்கள் வெளியூர்: ஆனி 21 (4—7—72) செவ்வாய் [இதழ்: 16

பூச்சி மருந்துத் தெளிப்பு— தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது

புதுடில்லி, ஜூலை 3—

விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிக்கும் மத்திய விவசாய அமைச்சகத்தின் பணியில் தமிழ்நாடே முதல் இடத்தை வகிக்கிறது.

மத்திய வேளாண்மை அமைச்சகத்தின் பூச்சி மருந்துத் தெளிப்பு விமானம் பிரிவு, தமிழ்நாட்டில் 1971—1972-ம் ஆண்டில் 8 37 இலட்சம் ஏக்கரில் விமானம் மூலம் மருந்து தெளித்துள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

'எந்தப் போராட்டமானாலும் சந்திப்போம்'

'இந்திரா காந்தியின் இந்தப் பதில் நமக்கும் பொருந்தும்'

'புயலைத் தடுத்துப் பூங்காவைக் காத்திடுவீர்'

கழகத் தோழர்கள் -- தோழமைக் கட்சியினர் -- ஏனைய பொதுமக்கட்குக் கலைஞர் வேண்டுகோள்

சென்னை, ஜூலை 3--

"நான்காம் நாள் போராட்டமானாலும் -- ஐந்தாம் நாள் போராட்டமானாலும் -- அதற்கு நானுகப் பதில் ஒன்றும் தரப்போவதில்லை; அண்மையில் உத்தரப் பிரதேசத்தில் நடைபெற்ற போராட்டத்தைப்பற்றிக் கூறுகையில் தலைமையமைச்சர் இந்திரா காந்தி 'ஆர்ப்பாட்டங்கள் எங்களுக்குப் புதிதல்ல; எந்தப் போராட்டமானாலும் அதைச் சந்திக்கத் தயாராக இருக்கிறோம்; சட்டம் -- ஒழுங்கு காப்பாற்றப்பட உள்ளூர் அதிகாரிகள் அதைக் கவனித்துக்கொள்வர்' என்று கூறினர்; இதே பதிலைத்தான் இங்குள்ள ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு -- இந்திரா காந்தியின வழியில் நின்று -- சொல்ல விரும்புகிறேன்.

"எந்தக் கிளர்ச்சி நடைபெற்றாலும், கழகத் தோழர்களே -- தோழமைக் கட்சிக்காரர்களே -- பொதுமக்களே -- நீங்கள், அமைதி காப்பாற்றப்படவும், அமளி ஏற்படாமலிருக்கவும் துணைநிற்க வேண்டும்; நாம் அமைதி வழி -- அண்ணா வழி நடக்கவேண்டும்.

"தமிழகமெங்கும் நீக்கமற நிறைந்திருப்பது தி. மு. கழகம்; அதை இங்கொன்றும் -- அங்கொன்றுமாக இருக்கும் சில பிரிவினர் எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்துவதால் அழித்துவிட முடியுமா?

"இவர்கள் நினைப்பதுபோல் ஆட்சி கவிழ்ந்துவிட்டால் என்ன நடக்கும்? இப்படிச் சொல்வதால், ஆட்சி இவர்களால் கவிழ்க்கப்படும் என்றோ, கவிழ்க்கப்படும் நிலை இருப்பதாகவோ யாரும் எண்ணத் தேவையில்லை; வாதத்திற்காகத்தான் கேட்கிறோம் -- ஆட்சி கவிழ்ந்துவிட்டால் என்ன நடக்கும் -- 6 மாதம் ஆளுநர் ஆட்சி நடக்கும்; பிறகு தேர்தல் நடக்கும்; அப்படித் தேர்தல் நடக்கின்றபோது, 'எதிர்க் கட்சியே இல்லை' என்ற நிலைக்குத் தி. மு. கழகம் உயருமே தவிர, அழிந்துபோகாது! ஆகவே, தி. மு. கழக அரசை யாராலும் கவிழ்க்கமுடியாது -- எந்தக் கிளர்ச்சியாலும் கவிழ்க்க முடியாது!

"நாங்கள் சிறைச்சாலையைப் பார்க்காதவர்களா? பாதுகாப்புச் சட்டத்தைப் பார்க்காதவர்களா? பாளையங்கோட்டையைப் பார்க்காதவர்களா?

"கழகத் தோழர்களை -- தோழமைக் கட்சிக்காரர்களை -- பொதுமக்களைக் கேட்டுக்கொள்வேன் -- தமிழகம்' எனும் பூங்காவில் வன்முறைப் புயல் நுழைகின்றபோது அந்தப் புயலைத் தடுக்கும் மதில்சுவர்போல இருங்கள் -- அரண்போல இருங்கள்; 'புயல் நுழைந்தது' என்று கூறி, 'இன்னொரு புயலாக நாங்கள் மாறுகிறோம்' என்று உங்களைப் புயலாக மாற்றிக்கொள்ளாதீர்கள் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நேற்று நடைபெற்ற விவசாயப் பிரச்சினையையொட்டிய 'கொள்கை விளக்க நாள்' பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டிக் கேட்டுக்கொண்டார்.

விவசாயிகள் பிரச்சினை பற்றிய கொள்கை விளக்கப் பொதுக்கூட்டம், நேப்பியர் பூங்காவில் -- சென்னை மாவட்ட தி. மு. க. சார்பில் நேற்று மாலை நடைபெற்றது.

சென்னை மாவட்ட தி. மு. க. துணைச்செயலாளர் ஆர். டி. சீதாபதி வரவேற்புரையாற்றினர்.

சென்னை மாவட்ட தி. மு. க. அவைத் தலைவர் அ. செல்வராசு தலைமைதாங்கினர்.

சட்டமன்ற மேலவை துணைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம், கே. விநாயகம், டி. எம். சண்முகம் (திராவிடர் கழகம்), நடிகமணி டி. வி. நாராயணசாமி எம்.எல்.சி., வண்ணைப் பகுதிச் செயலாளர் பி. ஏ. என். இராசரத்தினம் ஆகியோர் பேசினர்.

இறுதியில், கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றுகையில் கூறியதாவது:—

"இன்று நடைபெறுகின்ற கொள்கை விளக்கக் கூட்டங்கள், தி. மு. கழக அரசின்மீது காழ்ப்புணர்ச்சி கொண்டவர்கள் எவ்வாறெல்லாம் தவறான பிரச்சாரங்களில் ஈடுபட்டு -- தேவையற்ற கிளர்ச்சிகளில் இறங்கியிருக்கிறார்கள் என்பதனை விளக்குவதற்காகத் தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்டு -- தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நம்முடைய பொதுச் செயலாளரும், பொருளாளரும், ஏனைய கழகத் தலைவர்களும், அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற -- சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்கின்ற நிகழ்ச்சிகள் இதே நேரத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

தீய நோக்குடன் சில சக்திகள் தொல்லை கொடுக்க முனைந்துள்ளன

அமைதியோடு நடைபெற்று வருகின்ற தமிழக அரசுக்கு ஏதாவது தொந்தரவுகளை அளிக்க வேண்டுமென்ற தீய நோக்கத்துடன் சில சக்திகள் தலையெடுத்து, அதற்கு ஆள் சேராதா என்று அலைந்து திரிந்து -- கிடைத்ததை வைத்துக்கொண்டு -- 'முடிந்த அளவுக்குத் தொல்லை கொடுப்போம்'

என்ற ஆசையோடு சில காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

எதற்கும் ஓர் எல்லை உண்டு

கோவையில், 'மாட்டு வண்டி ஊர்வலம் நடத்துகிறோம்' என்று அனுமதி கேட்டுப் பெற்று -- ஊர்வலம் முடிந்தபிறகு ஊருக்குத் திரும்பாமல் -- போக்குவரத்து நெரிசல் உள்ள இடங்களிலும், மருத்துவமனை வாயில்களிலும், பள்ளிக்கூட வாயில்களிலும், இணைப்புச் சாலை ஓரங்களிலும் மாட்டு வண்டிகளைக் குறுக்கே நிறுத்தி -- காலையிலிருந்து இரவு 12-மணிவரையில் ஒரு பயங்கரமான சூழ்நிலையை உருவாக்கினர்கள்.

அந்த நேரத்திலும் காவல் துறையினர் அமைதியோடுதான் அந்தப் பிரச்சினையை அணுகினர்கள் என்பதையும், 'கருணாநிதி இவ்வளவு கோழையாக இருக்கிறானே' என்று சொல்லுகின்ற அளவுக்கு அமைதியோடு அது நடந்தது என்பதையும் நீங்கள அறியாதவர்களல்லர்.

இவ்வளவுக்கு இந்த அரசு, 'பொறுமையோடு -- நிதானத்தோடு இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்' என்பதில் கொண்டிருந்த கவலை காரணமாக, சட்டம் -- ஒழுங்கு -- அமைதி காப்பாற்றப்பட, 'பக்தவத்சலம் முறை'யில் துப்பாக்கியால் அல்ல -- 'காமராசர் முறை'யில் முதுகுளத்தூர் நிகழ்ச்சிகளைப்போல் அல்ல -- சிறு தடியடியும் நடத்தாமல், சட்டம் -- ஒழுங்கு -- அமைதி காக்கப்பட்டது; அதற்கும் ஒரு எல்லையுண்டு என்பதை நான் தெரிந்து வைத்திருக்கிறேன்.

நாட்டில் உண்மையான அமைதி நிலவ வேண்டுமென்று விரும்புகின்ற அனைவரும் இதனைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதை -- நான் ஏற்றிருக்கிற பொறுப்பின் காரணமாக -- சொல்லாமல் இருக்கமுடியாது.

(4-ம் பக்கம் பார்க்க)

யார் இந்தப் புண்ணியவான்கள்?

சென்னை, ஜூலை 3—

"நாம் அறப்போர் நடத்தினோம்; தேதி குறித்து, 'இன்ன இடத்தில் -- இன்னார் -- இப்படிப் போராட்டம் நடத்துவர்' என்று அறிக்கை விடுத்தோம்; அதன்படி போராட்டம் நடத்தினோம்.

உள்ளே போனபிறகு, 'விடுதலை செய்--விடுதலை செய்' என்று நாம் கேட்கவில்லை!

நாமாக விரும்பிச் சென்ற போராட்டத்தில் தண்டனைக் காலம் முடியாமல் திரும்பி வந்ததில்லை!

எதிர்பாராமல் அரசாங்கமே பிடித்தால்தான், 'என்னை ஏன் கைது செய்தாய் -- விடுதலை செய்' என்று கேட்டிருக்கிறோமே தவிர, விரும்பிச் சென்ற போராட்டத்தில் விடுதலை கேட்கவில்லை நாம்!

விலைவாசிப் போராட்டத்தின் போது, 20,000 பேர் அடையாள மறியல் செய்தோம்; புண்ணியவான்கள் மறுநாள் கூட விட்டிருக்கலாம் -- விடவில்லை!

சீன ஆக்கிரமிப்பு நடைபெற்றது; அதைக் காரணம் காட்டி கூட வெளியே விடவில்லை!

அப்படிப்பட்டவர்கள்தான் இப்போது, 'விவசாயிகளைச் சிறையில் அடைப்பதா' என்று கேட்கிறார்கள்!",

—முதலமைச்சர் கலைஞர்
(கொள்கை விளக்கக் கூட்டத்தில்)

அவர்கள் சிலர்-நாம் பலர்!

சுயநல சோஷலிச விரோதிகளின் முயற்சியை முறியடிப்போம்!

சென்னை, ஜூலை 3—

"எதையாவது செய்து இந்த ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும் என்று நினைத்து, விவசாயிகள் கிளர்ச்சியை உண்டாக்கியிருப்பவர்கள், தி. மு. கழகத்தின் எதிரிகள் மட்டுமல்லர் -- சனநாயகத்தின் எதிரிகள் -- தமிழ் இனத்தின் எதிரிகள் -- உழைத்துப் பிழைக்கும் ஏழை எளிய மக்களின் எதிரிகள்!

"மேட்டுக்குடியினரால் விரும்பப்படாத இந்த ஆட்சியை, 'சாதாரண மக்களால் காப்பாற்ற முடிகிறதா -- இல்லையா' என்று பார்க்கத்தான் 5-ந் தேதி போராட்டம் நடத்தப்போகிறார்கள்.

"மிகப் பலராக உள்ள சாதாரண மக்களாகிய நாம் மிகச் சிலராக உள்ள அந்த மேட்டுக் குடியினரை வெற்றிபெற விட்டுவிட்டோமானால், பிறகு நம்மைத் தலைதூக்கவே விடமாட்டார்கள்!

"சோஷலிச விரோதிகள் போராட்டம் நடத்துகிறார்கள்; சோஷலிசத் தோழர்களாகிய நாம் ஒன்று கூடியிருக்கிறோம்; சுரண்டல்காரர்கள் நடத்தும் அந்த வர்க்கப் போராட்டத்திற்கு நாம் பயப்படமாட்டோம்! இந்த அரசு அதற்கு அஞ்சி ஒருபோதும் பின்வாங்காது!"

—ம. பொ. சிவஞானம்
(நேப்பியர் பூங்கா கூட்டத்தில்)

சமதர்ம வாழ்வுக்குத் தமிழகமே வழிகாட்டுகிறது

கிராமங்களின் அடிப்படைத் தேவையை நிறைவேற்றக் காங்கிரசு ஆட்சி தவறிவிட்டது

ஏழை எளியோர் நல்வாழ்வுக்கு அண்ணாவைப் பின்பற்றி கலைஞர் ஆற்றும் பணி --- காஞ்சியில் குடிநீர் வழங்கு திட்டக் கருத்தரங்கில் அமைச்சர் என். வி. நடராசன் விளக்கம்

காஞ்சிபுரம், சூன் 30—

"நாடு விடுதலை பெற்றதைத் தொடர்ந்து கிராமிய மக்களுக்கு இது போன்ற திட்டங்கட்கு முதலிடம் தரப்பட்டிருக்குமானால், சுத்தம் படுத்தப்பட்ட குடிநீர் ஏழை மக்களுக்கு வழங்கும் பிரச்சினை என்றோ வெற்றி பெற்றிருக்கும்.

"நாடு விடுதலையடைந்ததும், கீழ்மட்டத்திலிருந்து திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் பதிலாக -- வாழ்க்கையின் வசதிகளை ஏகபோகமாக்கிக் கொண்டிருக்கும் வசதி படைத்தோரின் வாழ்வும் வசதியும் பெருகும் வகையில் கடந்த காலத்தில் திட்டம் வகுக்கப்பட்டது; அதனால் சுதந்தரம் பெறுவதற்கு முன்னர் -- ஏழை எளிய கிராம மக்கள் எவ்வாறு சாதாரண வசதிகளைக்கூடப் பெற இயலாது தொல்லைப்பட்டு வந்தார்களோ அதே நிலைதான் சுதந்தரத்திற்குப் பிறகும் இருந்துவந்தது.

"சமதர்மக் கொள்கைகளை உரத்தக் குரலில் எடுத்துக் கூறிப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்திக் கொள்வதால் சமதர்மம் ஏற்பட்டுவிடாது; காந்தியடிகள் கோரிய விடுதலையின் குறிக்கோள், 'கிராம மக்களும் நகரங்களில் வாழும் மக்களைப்போன்று வசதிகளைப் பெறவேண்டும்' என்பதேயாகும்.

"ஆனால் கடந்த காலத்தில் அவ்வித நோக்கமின்றி, மரத்தின் உச்சியில் ஏறிக்கொண்டு மரத்தின் அடிப்பாகத்தை வெட்டுவது போன்ற தன்மையில் திட்டங்களைக் கீழ்மட்டத்திலிருந்து அமைத்து உருவாக்குவதற்குப் பதிலாக நேர்மாறான காரியங்களில் வீணாக்கப்பட்டது!

"இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் சமதர்ம வாழ்வின் நலனைப் பின்தங்கிய மக்கள் -- தாழ்த்தப்பட்ட மக்கள் -- ஏழை எளியவர்கள் -- குறிப்பாகக் கிராம மக்கள் பெறக்கூடிய திட்டங்களைப் பேரறிஞர் அண்ணா அவர்களைத் தொடர்ந்து முதலமைச்சர் கலைஞர் நிறைவேற்றி வருகிறார்.

"சமதர்ம வாழ்வைப் பெறுவதற்கு இந்தியாவுக்கே தமிழ்நாடுதான் வழிகாட்டியாக விளங்குகிறது!

"'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பதை நாம் அனைவரும் அறிவோம்; அவ்வித நோயற்ற வாழ்வைப் பெறவேண்டுமானால், பல்வேறு நோய்களுக்கு வித்திடக்கூடிய குடிநீர் சுத்தமாக இருத்தல் வேண்டும்; அத்தகு சிறப்புப் பணியினை நிறைவேற்றக் குடிநீர் வாரியம் ஆற்றிவரும் பணி நிதானமாக -- அதே நேரத்தில் நிரந்தரமாக மக்களுக்குப் பயன்படும் வகையில் நிறைவேற்றப்படுகிறது.

"குடிநீர் வாரியம் மேலும் சிறப்புற இயங்கி அதன் இலட்சியம் வெற்றி பெறவே மாவட்டங்கள்தோறும் மக்களைக் கூட்டி அனுபவமிக்கவர்களின் ஆலோசனையைப் பெறும் வகையில் கருத்தரங்கு நடைபெற்று வருகிறது; இதுதான் சனநாயகத்தின் அஸ்திவாரமாகும்.

"ஏழை எளிய மக்களுக்காகச் செய்யப்படும் குடிநீர்த் திட்டம், அந்த மக்களின் அனுபவமிக்கவர்களின் அரிய கருத்தை அறிந்து செய்வதென்பது மேலும் பலன் தரக்கூடியதாகும்.

"கிராம மக்களின் வாழ்க்கையில் மிகுந்த அக்கறை கொண்ட அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சியில் நடைபெறும் கருத்தரங்கு தனிச் சிறப்பு வாய்ந்ததாகும்"

என்று தொழிலாளர் நல அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள், காஞ்சியில் குடிநீர் வழங்கு திட்டக் கருத்தரங்கைத் துவக்கி வைத்து உரையாற்றுகையில் கூறினார்; அவர் ஆற்றிய உரை வருமாறு:—

"நாம் உயிர் வாழ்வதற்குக் காற்று -- ஒளி -- பூமி எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது 'குடிநீர்'; இது நமது அடிப்படைத் தேவைகளில் மிக முக்கியமானதாகும்.

பண்டையத் தமிழர் பண்பாட்டில் நீருக்கு மிக முக்கியத்துவம் வழங்கி -- நதிக் கரைகளில் மக்கள் கூடி வசிக்க வழிவகுத்தனர்; இன்றையத் தமிழகப் பெரிய நகரங்களான மதுரை -- திருச்சி -- நெல்லை ஆகியவைகளின் அமைப்பை நோக்கும்போது இது புலனாகும்.

மழை குறிப்பிட்ட காலத்தில் பெய்தால் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படாது; ஆனால் வர வர மழை பெய்வதன் அளவு குறைந்துவிட்டது; அதே நேரத்தில் மக்கள் பெருக்கம் அதிகரித்துள்ளது.

அதுமட்டுமல்லாமல், தண்ணீரைக் கொண்டு பல தொழிற்சாலைகள் பொருட்களைத் தயாரித்து வருவதால், போதுமான அளவுக்குத் தண்ணீர் வழங்குவது இன்றைய சிக்கல்களில் ஒன்றாகும்.

மக்கள் தொகைப் பெருக்கத்தால், பயன்படுத்திய நீர் கழிவு நீர் என அப்புறப்படுத்தப்பட்டு மீண்டும் நதிகளை அடைவதாலும், தொழிற்சாலைகள் கழிவுகளை அகற்றும் நீர் நதிகளில் விழுவதாலும் நதி நீர் மாசுபடுத்தப்பட்டு மக்களுக்குப் பயன்படாமல் போய்விடுகிறது.

மாசுபடுத்தப்பட்ட ஆற்று நீரைப் பருகுவதால், நீர் வழி வரும் காலரா -- டைபாய்டு -- மஞ்சள் காமாலை போன்ற தொத்து நோய்களுக்கு மக்கள் பலியாகின்றனர்.

எனவே, இன்றையப் பிரச்சினை, மக்களுக்கு நோய் ஏற்படாத வகையில் நீர் வழங்குவதுதான்!

இம்முறையில் போதுமான அளவு சுத்தம் செய்யப்பட்ட தண்ணீர் வழங்காவிட்டால், மீண்டும் மக்கள் அவர்தம் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், நதி -- குளம் -- கிணறு போன்ற நீர் நிலைகளை நாடி -- அதன்வழி தொத்து நோய் பரவ ஏதுவாகும்; எனவே, போதுமான அளவு குடிநீர் வழங்குவது மிக முக்கியமாகிறது.

தமிழகத்தைப் பொறுத்த வரையில், 95 சதவிகிதம் நதி நீரைப் பல வகையிலும் பயன்படுத்தியிருக்கிறோம்; எனவே, வருங்காலக் குடிநீர் தேவைகளை நிறைவு செய்ய இவைகளிலிருந்து நீர் பெற்றால் விவசாயம் பாதிக்கப்படும்; மின் விசை பெறுவதற்கும் இடையூறு ஏற்படும்.

எனவே, நிலத்தடி நீரைப் பெரும் அளவுக்குப் பெற்று -- குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

நிலத்தடி நீரைப் பெறுவதில் பல சிக்கல்கள் உள்ளன; அவை களாவன:—

1. நிலத்தடி நீரில் அதிக அளவில் உப்பு கரைந்திருப்பதால், குடிப்பதற்கு -- தொழிற்சாலைகளுக்கும் தூய்மைப்படுத்தாமல் பயன்படுத்த இயலாது.

2. குறைந்த ஆழத்தில் போதுமான அளவுக்கு நீர் கிடைக்கும் வாய்ப்பு -- தமிழகத்தைப் பொறுத்த வரையில் -- மிகக் குறைவாக உள்ளது.

3. ஒரு கிணற்றிற்கு அருகில் பல கிணறுகளை மேலும் மேலும் வெட்டி மின் இணைப்புப் பெற்றுக் குறைந்த காலத்தில் பெரும் அளவில் நீரேற்றும் பம்புகள் பல இயங்குவதால், நிலத்தடி நீர் மட்டம் ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருகிறது.

மேலும், குறிப்பிட்ட அளவில் ஓரிடத்தில் கிடைக்கும் நிலத்தடி நீரைப் பயன்பெற விழைவதால், அதிக முதலீட்டிற்குக் குறைந்த நீரைப் பெறும் நிலையிலேயே உள்ளனர்.

தமிழகத்தில், சிற்றூர்களிலுள்ள மக்கள் குடிநீருக்குப் பெரிதும் கிணற்றையே நம்பியிருக்கின்றனர்.

இம்மாவட்டத்தைப் பொறுத்த வரையில், 360 கிராமங்கள் குடிநீர் நிலை ஏதுமில்லாமலும் -- கிராமங்களில் நீர்வழி பரவும் பிணிகள் நிலவி வருவதாகவும் -- 148 கிராமங்களில் போதுமான அளவு நீர் பெற்று வழங்கும் நிலை இல்லாது இருப்பதாகவும் அறிகிறேன்.

இக்குறையைப் போக்கத் தமிழ்நாடு குடிநீர் -- வடிகால் வாரியம் மாவட்டக் கருத்தரங்குகளை நடத்தி -- மக்கள் கருத்தறிந்து திட்டம் வகுத்து -- நிரந்தர நிவாரணம் அளிக்க இருப்பதைப் பாராட்டுகிறேன்."

இன்று இந்தியாவிலேயே முன்னோடியாகத் தமிழகத்தில்தான், குடிநீர் வடிகால் வசதிகளை வழங்குவதற்கு எனத் தனி வாரியம் ஏற்படுத்தப்பட்டு -- கடந்த ஓராண்டுக் காலமாகச் செயல்பட்டு வருவதானது, தமிழக முதலமைச்சரின் பல துறை வெற்றிகளில் தலையானதாகும்.

முதலமைச்சர் அவர்களின் விருப்பமெல்லாம், எப்படித் தமிழகக் கிராமங்கள்தோறும் மின்விசை வழங்கினோமோ அந்த அளவிற்கு எல்லாக் கிராம மக்களுக்கும் சுகாதார முறையில் சுத்தப்படுத்தப்பட்ட குடிநீரைப் போதுமான அளவு வழங்க வேண்டும் என்பதுதான்.

மத்திய அரசும் இந்த அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், ரூ. 20 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக அறிகிறோம்.

சமுதாயத்தில் கீழ்த்தளத்திலுள்ள ஏழைஎளிய மக்கள் வாழும் பகுதிகளுக்கும் -- மலை இனத்தவர் வாழும் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்குவதில் முதலிடம் அளிக்கப்படும் என அறிந்து அதை மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

யானைக்கால் நோய் தடுப்புப் பணி

சென்னை நகரில் மாநகராட்சி விரைவில் மேற்கொள்ளும்

சென்னை, சூன் 30—

சென்னை மாநகராட்சி, மத்திய அரசின் முழு உதவியுடன் விரைவில் நகரில் யானைக்கால் நோய் தடுப்புப் பணியை மேற்கொள்ளப் போகிறது.

இந்தத் திட்டத்துக்கு ஆண்டுக்கு ரூ. 20 இலட்சம் செலவாகும்.

நிதி உதவியுடன், திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய சாதனங்களையும் மத்திய அரசு இலவசமாக சப்ளை செய்யும். தொடக்கத்தில் ஓர் இலட்சம் லிட்டர் கொசு கொல்லி எண்ணெய் தருவதாகவும் மத்திய அரசு கூறியிருக்கிறது.

ஒருவகை கொசுக்களால்தான் இந்த யானைக்கால் நோய் ஏற்படுகிறது; வீடுகளிலிருந்து வரும் சாக்கடை நீர்த் தேக்கங்கள் -- கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய் போன்றவைகளே இந்தக் கொசுக்களுக்கு உற்பத்தி இடங்களாக விளங்குகின்றன.

நகரில் மாதிரி ஆய்வு நடத்தியதில், தண்டையார்பேட்டை— இராயபுரம்--வண்ணாரப்பேட்டை -- கொருக்குப்பேட்டை -- கொண்டித்தோப்பு -- அகரம் -- அயனாவரம் -- செம்பியம் -- கோடம்பாக்கம்-- நுங்கம்பாக்கம் -- மேற்கு மாம்பலம் -- அடையாறு -- சைதாப்பேட்டை -- கிண்டி ஆகிய இடங்களில் யானைக்கால் நோய் அதிகம் காணப்படுவதாகத் தெரியவந்திருக்கிறது.

மாநகராட்சியின் யானைக்கால் ஒழிப்புத் திட்டப் பணியில், 4 உதவி சுகாதார அதிகாரிகள் -- 2 சீனியர் பூச்சி இயல் நிபுணர்கள் -- 40 சுகாதார இன்ஸ்பெக்டர்கள் -- 40 பீல்டு உதவியாளர்கள் -- 80 தலைமை மஜ்தூர்கள் -- 400 மஜ்தூர்கள் ஆகியோர் ஈடுபடுத்தப்படுவர்.

அனாதைகளுக்கு ஆதரவுப் பணி

மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த யோசனை

சென்னை, சூன் 30—

அனாதைகள் பராமரிப்புப் பணியை மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்றும், அதற்காக ஒரு வாழ்க்கை நல நிதி ஏற்படுத்த வேண்டுமென்றும், 'சேவா சத'னில் நடந்த ஒரு கருத்தரங்கில் யோசனைகள் கூறப்பட்டன.

உடல் ஊனமும் -- மனக்கோளாறும் உள்ள குழந்தைகளுக்கும் இந்தப் பணியை விரிவுபடுத்த வேண்டுமெனக் கோரப்பட்டது.

இந்தக் கருத்தரங்கை டாக்டர் விசாலாட்சி நெடுஞ்செழியன் துவக்கிவைத்தார்.

உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி திரு. ஆர். சதாசிவம் தலைமை வகித்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டு முடிவுகள் -- முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 75,000 ஏக்கர் நிலம்

குடியிருப்பு மனைச் சட்டம் மாநிலம் முழுவதற்கும் விரிவுபடுத்தப்படும்

மானாவாரி நிலங்களுக்கான அடிப்படை நிலத் தீர்வை நீக்கம்

1,07,500 பேர்களுக்கு இலவசக் கண் சிகிச்சை

சென்னை, சூலை 3—

மழையையே நம்பியிருக்கும் 'மானாவாரி' நிலங்களுக்கு ஏக்கர் வரையறையின்றி அடிப்படை நிலத் தீர்வையை நீக்குவது என்றும், 1972--73-ஆம் ஆண்டில் 75 000 ஏக்கர் நிலத்தை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்குவது என்றும், பேரறிஞர் அண்ணா பிறந்த நாளன்று 1 15 000 பேருக்குக் குடியிருப்பு மனைகள் வழங்கும் முழுமை விழாவை நடத்துவது என்றும், தற்போது தஞ்சை மாவட்டத்தில் நடைமுறையிலுள்ள குடியிருப்பு அனுபவதாரர்கள் சட்டத்தை மாநிலம் முழுவதற்கும் விரிவுபடுத்துவதென்றும், இலவசக் கண் சிகிச்சைத் திட்டத்தின் கீழ் 1973 சூன் 3-ம் நாளுக்குள் 1,07 500 பேர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்வது என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் முடிவு செய்யப்பட்ட தகவல்களை முதலமைச்சர் கலைஞர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; இத்தொடர்பில் அவர் அறிவித்ததாவது :--

"நில ஒப்படை (பட்டா வழங்குதல்) கடந்த ஐந்தாண்டுகளில் 5,29,485 ஏக்கர் -- 2,65 872 பேருக்கு வழங்கப்பட்டிருக்கிறது; இன்னும் அளிக்கப்படவிருக்கின்ற நிலத்தின் பரப்பளவு 1,52,745 ஏக்கர்; அதில், நடப்பு ஆண்டில் (1972—73-ல்) 75,000 ஏக்கர் நிலத்தை நிலமற்ற ஏழை விவசாயிகட்கு அளிப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

1971 டிசம்பர் 4-ம் நாளின் அரசின் ஆணைப்படி, 1972—73-ல் 50,000 ஏக்கர் காட்டு நிலம் நிலமற்ற ஏழை விவசாயிகட்குப் 'பட்டா செய்து கொடுக்க எடுக்கப்பட்ட முடிவு தீவிரப்படுத்தப்படும்.

ஒப்படை செய்யப்பட்ட நிலங்களில் இன்னும் பயன்படுத்தப்படாத நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவர என்னென்ன முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்ற விவரங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உடனடியாக அரசுக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

தற்போது பட்டாக்கள் வழங்கப்படுகின்ற ஏழைகட்கு, 'ஏழை எனப்படுபவர் குடும்பத்தில் 5 பேருக்குக் குறைவாக இருந்து -- குடும்பத்தின் எல்லா வகையான வருமானமும் மாதம் ஒன்றுக்கு 100-க்குக் குறைவாக இருக்க வேண்டும்' என்றும், '5 பேருக்கு மேல் உள்ள குடும்பத்தின் மாத வருமானம் 150-ஆக இருக்க வேண்டும்' என்றும் இதுவரையில் இருந்துவருகிறது; இதை மாற்றி, முதல் பிரிவினர் மாத வருமானம் ரூ 100-லிருந்து ரூ 200-க்குள் இருக்கலாம் என்றும், இரண்டாவது பிரிவினருக்கு ரூ. 150-லிருந்து ரூ. 250-க்குள் இருக்கலாம் என்றும் முடிவு எடுக்கப்பட்டது.

தற்போது தஞ்சாவூரில் நடைமுறையில் இருக்கும் குடியிருப்பு அனுபவதாரர்கள் சட்டத்தை மாநிலம் முழுவதும் -- விவசாயத் தொழிலாளர்களின் நன்மையைக் கருதி விரிவுபடுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது; இந்தச் சட்டத்தின்கீழ் தஞ்சை மாவட்டத்தில் இதுவரையில் 33,000 பேருக்கு மனை வழங்கப்பட்டிருக்கிறது; அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15-ம் நாளன்று 1,15,000 பேருக்கு இந்த மனைகள் வழங்கப்படும் 'முழுமை விழா' நடைபெறும்; இது மற்ற மாவட்டங்கட்கும் விரிவுபடுத்தப்படுமானால் சுமார் இரண்டு இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் மேலும் பயனடைவார்கள்.

குத்தகைதாரர் பற்றிய உரிமைப் பதிவுச் சட்டத்தின்கீழ் உள்ள பணிகளை விரைவில் முடிக்கக் கூடுதல் பணியாளர்களை நியமித்து, எல்லா வேலைகளையும் 31—8—72-க்குள் முடிப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

தற்போதைய கணக்குகளில், 'மானாவரி நிலங்கள்' என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலங்களுக்கு -- ஏக்கர் வரையறை இல்லாமல், அடிப்படை நிலத் தீர்வையை (தரம் தீர்வையை) நீக்குவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

கிராமப் பணிகள் -- கிராம மனிதச் சக்தித் திட்டம் -- உள்ளூர் சாலைகள் மானியம் -- கிராம வேலை வாய்ப்பு விரிவுத் திட்டம் -- வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகட்குச் சிறப்புத் திட்டம் ஆகியவற்றை ஒன்றாக இணைத்து -- ஊராட்சி ஒன்றியங்களில், ஒருங்கிணைந்த சாலைத் திட்டங்களைத் தயாரித்து -- அவற்றை 2 மாதத்திற்குள் கலெக்டர்கள் அரசுக்கு அனுப்ப வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

இலவசக் கண் சிகிச்சைத் திட்ட அடிப்படையில், கீழ்க்கண்டவாறு ஏழைகளுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய மாவட்டக் கலெக்டர்கள் உறுதியளித்துள்ளனர்; மாவட்ட வாரியாக இந்த எண்ணிக்கை விவரம் வருமாறு:—

சென்னை—10 000
திருநெல்வேலி—15,000
திருச்சி—6,000
தஞ்சை—10,000
சேலம்—8 000
இராமநாதபுரம்—6,000
நீலகிரி—1,500
மதுரை—10,000
கன்னியாகுமரி—3 000
தர்மபுரி—3,000
கோவை—10,000
செங்கற்பட்டு—5,000
தென் ஆற்காடு—10,000
வட ஆற்காடு—10,000

ஆக மொத்தம் மாநிலம் முழுவதிலும் 1 07,500 பேருக்குக் கண் அறுவைச் சிகிச்சை செய்வது என்றும், 1973 சூன் திங்கள் 3-ம் நாளுக்குள் இந்த இலக்கை நிறைவேற்றுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

குடிசை ஒழிப்புத்திட்டம்

"கோவை, மதுரை, திருச்சி, சேலம் ஆகிய நகர்ப் பகுதிகளில் உள்ள குடிசைகளை மாற்றி -- அவைகளுக்குப் பதில் நல்ல கட்டடங்கள் அமைப்பதுபற்றியும் பரிசீலிக்கப்பட்டது" என்று முதல்வர் அறிவித்தார்.

ரூ 2.20 கோடி மதிப்புள்ள கள்ளக்கடத்தல் பொருள்கள்

அதிகாரிகள் கைப்பற்றினர்

புதுடில்லி, சூன் 30—

கடந்த ஏப்ரல் திங்களில் ரூ 2.20 கோடி மதிப்புடைய கள்ளக் கடத்தல் பொருட்களைச் சுங்க அதிகாரிகள் கைப்பற்றினர்.

தவறான வழியில் இறக்குமதியான ரூ 1.97 கோடி மதிப்புள்ள பொருட்கள் பிடிக்கப்பட்டன; இதில் மற்ற பொருட்களுள் ரூ 20 இலட்சம் மதிப்புள்ள கைக்கடிகாரங்களும், ரூ. 85 இலட்சம் மதிப்புள்ள தனிவகைகளும், சர்வதேச விலை மதிப்பின்படி ரூ. 39 இலட்சம் பெறுமானமுள்ள தங்கமும் இருந்தன.

சட்டத்தை மீறி ஏற்றுமதி செய்யப்பட்ட ரூ. 3 இலட்சம் மதிப்புடைய அபாயகரமான மருந்துகளும், ரூ. 9 இலட்சத்திற்கான ரூபாய் நோட்டுக்களும், படகுகள் முதலானவையும் சுங்கத்துறை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன.

மத்திய ரிசர்வ் போலீசுப் படையின் தீவிர நடவடிக்கை

மத்திய ரிசர்வ் போலீசுப் படை கள்ளக்கடத்தல் தடுப்பு நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது.

மத்தியப் பிரதேச மாநிலத்தில் நிமச் என்னுமிடத்தில் ரூ. 1 00 இலட்சம் மதிப்புள்ள 90 கிலோ கிராம் அபினியை 5 பேர் திருட்டுத்தனமாகக் கடத்திச் சென்றபோது மத்திய ரிசர்வ் போலீசுப் படை கைப்பற்றியது.

மேலும் ரூ. 15,000 மதிப்புள்ள தங்க நகைகள் -- ரூ. 15,000 மதிப்புள்ள தேயிலை, ரூ. 1,000 மதிப்புள்ள அரிசி, கோதுமை போன்ற பண்டங்கள், ரூ. 5,000 மதிப்புள்ள சணல் ஆகிய கள்ளக் கடத்தல் பொருட்களையும் கைப்பற்றியது.

முகவரி மாற்றம்

புலவர் அறிவுடைநம்பி,
24/16, அப்பு முதலித் தெரு,
மயிலாப்பூர், சென்னை-4.
தொலைபேசி : 76878

அரசின் நல்ல பணிகளுக்கு ஊனம் விளைவிக்க முயற்சி

'கிளர்ச்சி'கள் என்பதன் பேரால் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள்

சில 'அரசியல் சக்தி'களின் போக்கைப் பொருட்படுத்தத் தேவையில்லை

புதிய மறுமலர்ச்சிக்கு வழிகோலுவீர் -- மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு முதலமைச்சர் கலைஞர் வேண்டுகோள்

சென்னை சூலை 3—

"இன்றைக்கு அரசு செய்கின்ற அரும் பணிகளில் நீங்கள் இரண்டு விதக் கருத்துக்களை வைத்திருக்கமாட்டீர்கள் என்று கருதுகிறேன்; இந்த அரசாங்கம் எவ்வளவு நிதானத்தோடு அமைதியாகப் பிரச்சினைகளை அணுகுகிறது என்பதையும், கிளர்ச்சிகள் எந்த வடிவம் கொண்டாலும் அந்தக் கிளர்ச்சிகளை அடக்குவதிலும், சட்டம் -- ஒழுங்கு ஆகியவைகளைக் காப்பாற்றுகின்ற நேரத்திலும் மற்ற மாநிலங்களில் இல்லாத அளவிற்கு நடந்துவருகிறது என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

"நாம் எவ்வளவுதான் நல்ல முயற்சிகளை மேற்கொண்டாலும், எங்கேயோ சில விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் ஏற்பட்டுவிடுகின்றன; நம்முடைய முயற்சிகளுக்கு ஊனம் ஏற்படுகின்ற அளவில் சில அரசியல் சக்திகள் நாட்டில் நடமாடினால் அதைப் பொருட்படுத்தாமல், 'இந்த அரசு உள்ளபடியே மக்களுக்காகப் பாடுபடுகிறதா இல்லையா' என்ற கேள்வியை அதிகாரிகள் ஒருமுறை தங்கள் உள்ளத்தில் எழுப்பிக்கொண்டு -- அதற்குக் கிடைக்கின்ற உண்மையான விடைக்கு ஏற்ப மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் பணியாற்றினால், 'நாம் அனைவரும் சேர்ந்து ஒரு புதிய மறுமலர்ச்சியை -- ஒரு புதிய உணர்வினை நம் மக்களுக்காக உருவாக்குகிறோம்' என்பதை அறிந்துகொள்ள இயலும்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் -- காவல்துறை அதிகாரிகளின் இரண்டு நாள் மாநாட்டின் இறுதியில் உரையாற்றுகையில் தெளிவுற விளக்கிக் கூறினார்; அடித்தளத்தில் இருக்கின்ற மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கு என்னென்ன நற்காரியங்களைச் செய்திட வேண்டும் என்பதையெல்லாம் நினைவுறுத்திப் பேசுகையில் அவர் கூறியதாவது:—

ஊக்கத்துடன் பணியாற்றுவீர்!

"கிராமங்களில் நல்ல முன்னேற்றத்தைக் காணும் வகையில், இந்த ஐந்தாறு ஆண்டுக் காலத்தில் இந்த அரசு திட்டமிட்டு நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறது.

குறிப்பாகவும் சிறப்பாகவும் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வீட்டு மனைகள் வழங்குதல் போன்ற திட்டங்களை நிறைவேற்ற நாம் மேற்கொண்டிருக்கின்ற பணிகளுக்கு நம்மை நாமே பாராட்டிக் கொள்ளும் அளவிற்கு நடைபெற்றிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது; தொடர்ந்து அதிலே இன்னும் அக்கறை செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறீர்கள்; நீங்கள் அதிலே நல்ல ஊக்கத்தோடு பணியாற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

குடும்ப நலத் திட்டம் -- முனைப்புடன் செயலாற்றுவீர்!

குடும்ப நலத் திட்டம் இந்தச் சமுதாயத்திற்கும் -- நாட்டும் பொருளாதாரத்திற்கும் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை விளக்க வேண்டிய அவசியமில்லை; அதை உணர்ந்து பணியாற்றி வருகிறீர்கள்; அதை மேலும் முனைப்போடு நீங்கள் தொடர்ந்து செய்ய வேண்டும்.

கண் சிகிச்சைத் திட்டம்

இந்த ஆண்டு இலவசக் கண் சிகிச்சை ஓர் இலட்சம் பேருக்கு அளிக்க வேண்டுமென்று அரசு எடுத்திருக்கும் திட்டத்திற்கு உங்களுடைய உழைப்பையும் -- கடமை உணர்வினையும் நீங்கள் முறையே தருவதற்கும், உணர்த்துவதற்கும் முற்பட்டிருக்கிறீர்கள் என்பதை, விவாதத்தில் நீங்கள் அளித்த விளக்கங்களின் மூலம் அறிந்து கொண்டிருக்கிறேன்; மாவட்ட ஆட்சித் தலைவர்கள் 5,000 என்றும்—10,000 என்றும்—15,000 என்றும் இலவசக் கண் சிகிச்சை செய்வதற்கு -- சிகிச்சை முகாமை நடத்துவதற்கு உறுதியளித்திருக்கிறீர்கள்; அது, நான் கேட்ட நேரத்தில் எடுத்துச் சொல்லப்பட்ட புள்ளியாக இல்லாமல், அதற்கு மேலும் செய்துகாட்டக் கூடிய ஆற்றல் படைத்தவர்கள் நீங்கள் என்பதை, கடந்தகால நடவடிக்கைகள் மூலமாக உணர்ந்திருக்கிறேன்.

சாலை இணைப்புப் பணிகள் -- விரைவுக்கு வழிகோலுவீர்

கிராமங்களில் சாலை இணைப்பு எவ்வளவு முக்கியம் என்பதையும் -- அதற்கு அரசு எடுத்திருக்கின்ற முயற்சிகளையும் நீங்கள் அறிவீர்கள்; அதற்கான குறிப்புகளைப் பற்றி அரசு உடனடியாக செயல்படுவதற்கு ஆக்கப்பூர்வமான நல்ல யோசனைகளை சில மாதங்களில் அளிப்பதோடு மாத்திரமல்லாமல், அந்தப் பணிகள் வேகமாக நடைபெறுவதற்கான குறிப்புகளையும், உடனடியாக அனுப்பி வைப்பீர்கள் என்றும் நம்புகிறேன்.

பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தில் தீவிரக் கவனம்

சென்ற ஆண்டு தொடங்கப்பட்ட பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தில், முதல் கட்டமாகத் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு இல்லங்கள் அமைப்பதில் நாம் ஈடுபட்டிருக்கிறோம்; '50,000-லிருந்து 60,000 வரை தமிழ்நாட்டில் பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள்' என்று அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்; அத்தனைப் பேருக்கும் மறுவாழ்வு உடனடியாக அளிப்பது என்பது இயலாத காரியம் என்றாலும், 6 000 -- 7,000 என்ற எண்ணிக்கை அளவில் உள்ள தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு இல்லங்களை அமைப்பதில் நீங்கள் வேகம் காட்ட வேண்டும்; இந்த ஆண்டு அப்படிப்பட்ட 10 இல்லங்களாவது அமைப்பதற்கு நீங்கள் தீவிர கவனம் செலுத்தவேண்டும் -- அதைச் செலுத்தவீர்கள் என்றும் நான் நம்புகிறேன்,

குடிநீர்ப் பிரச்சினை

குடிநீர்ப் பிரச்சினை இன்று கிராமங்களில் முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது; ஆளுநர் அவர்களும் தமது உரையில் இது குறித்த எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். ரூ. 50,000 வரை செலவாகின்ற திட்டங்களை ஒன்றியங்கள் ஏற்றுக்கொள்வது என்றும், அதற்கு மேல் ஆகிய செலவுகளை குடிநீர் வாரியம் ஒப்புக்கொள்ளலாம் என்றும் கருத்துச் சொல்லப்பட்டிருக்கிறது; அதற்கு ஊராட்சி ஒன்றியங்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து -- அதற்குப் பிறகு உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்; இதற்கிடையே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மிக அவசரமாகக் கிராமங்களில் இந்தக் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வழிவகைகளை எல்லாம் ஆராய்ந்து -- அந்தப் பணியில் மும்முரமாக ஈடுபட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

ஒத்துழைப்பு அவசியம்

நாட்டில் இன்று நகர்ப்புறங்கள் ஓரளவிற்குக் கவனிக்கப்படுகின்றன -- கிராமப்புறங்கள் கவனிக்கப்படாமல் இருக்கின்றன -- என்ற குறைபாட்டிலிருந்து நீங்க அரசு செய்கின்ற காரியங்கள் பயன்பட்டு வருகிறதென்றாலும், மேலும் அதில் தீவிரமாகக் கிராமப்புற நன்மையை மையமாக வைத்து நாம் பணியாற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம்; அந்த வகையில் நீங்கள் அனைவரும் இதுவரையில் அளித்த ஒத்துழைப்பைப்போல் ஒத்துழைப்பீர்கள் என்றும் நம்புகிறேன்.

ஆர்வத்துடன் பணியாற்றுவீர்

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அவர்களோடு தொடர்பு கொண்டு பணியாற்றுகின்ற மேலே இருக்கின்ற அதிகாரிகள் அனைவரும் ஒத்துழைத்து, 'ஏதோ பதவிப் பொறுப்பில் நாம் இருக்கிறோம் -- அந்தக் கடமைக்காகச் செய்கிறோம்' என்று இல்லாமல், 'நாமே மக்களுக்காக இருக்கிறோம் -- மக்கள் தருகிற வரிப் பணம் மக்களுக்காகச் செலவழிக்கப்பட வேண்டும்' என்ற ஆர்வத்தோடு தொடர்ந்து பணியாற்றவேண்டும்."

சிறு சேமிப்புத் திட்டம் -- தமிழகத்தின் சாதனை பற்றி முதல்வர்

சென்னை, சூலை 3—

"சிறுசேமிப்பு இயக்கத் துறையில் கடந்த ஆண்டுகளைவிடக் குறைவாகவோ அல்லது ஏனைய பிற மாநிலங்களைவிடக் குறைவாகவோ தமிழ்நாட்டின் சாதனை இல்லை; இந்த வகையில் நமது மாநிலம் பின்தங்கிய நிலையிலும் இல்லை"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், செய்தியாளரிடம் தெரிவித்தார்.

கடந்த வெள்ளியன்று மாவட்டக் கலெக்டர்கள் மாநாட்டைத் துவக்கிவைத்து ஆளுநர் கே. கே. ஷா ஆற்றிய உரையில் 'சிறு சேமிப்புத் துறையில் குறிக்கப்பட்ட இலக்கை அடையவில்லை' என்று கூறியிருந்தார்; இதை முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்து செய்தியாளர்கள் கேட்டனர்; அதற்குப் பதிலளிக்கையில் முதலமைச்சர் கூறியதாவது :—

"சிறு சேமிப்பு இயக்கத் துறையில் மேலும் ஊக்கப்படுத்த வேண்டும் என்ற வகையிலேயே ஆளுநர் தமது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

சிறு சேமிப்பைப் பொறுத்தவரையில், 1968-69-ம் ஆண்டில் நமது மாநிலம் ரூ. 5,60,00,000-மும், 1969-70-ல் ரூ 4 71,00,000-மும், 1970—71-ல் 5,29,00,000-மும் 1971—72-ல் இதுவரையில் ரூ. 10 கோடியும் திரட்டியிருக்கிறது.

நிர்ணயிக்கப்பட்ட இலக்கு ரூ 20 கோடி என்று இருந்தாலும், முந்தைய ஆண்டுகளைவிட இது அதிகமானது.

இந்தியா முழுவதும் எடுத்துக் கொண்டால் மகாராட்டிரம் -- உத்தரப் பிரதேசம் -- மேற்கு வங்கம் -- பீகார் ஆகிய மாநிலங்களில்தான் சிறு சேமிப்பு இயக்கம் மூலம் ரூ 20 கோடிக்குமேல் வசூலாகியிருக்கிறது; ஆந்திரம், மைசூர், உள்ளிட்ட ஏனைய மாநிலங்கள் அனைத்திலும், தமிழகத்தைவிடச் சிறு சேமிப்புத் துறையில் வசூல் குறைவுதான்.

இந்தத் துறையில் பணிகளை மேலும் ஊக்கப்படுத்தவேண்டும் என்கின்ற வகையில்தான் ஆளுநர் உரை அமைந்திருக்கிறது."

மதுரை மாவட்ட தி. மு. க. மாநாட்டு அலுவலக முகவரி

ஆகஸ்டு 4, 5, 6 ஆகிய நாட்களில் மதுரையில் நடைபெறவிருக்கும் மதுரை மாவட்ட தி. மு. க. 5-வது மாநாட்டு அலுவலகம் கீழ்க்காணும் முகவரியில் அமைக்கப்பட்டுள்ளது :—

மதுரை மாவட்ட தி. மு. க.
மாநாட்டு அலுவலகம்
1-ம் பகுதி மங்கம்மாள் சத்திரம்,
மதுரை-1.

தொலைபேசி எண் :
31301

சென்னை 2-வது வட்ட மக்கள் முன்னேற்ற மன்றம்

சென்னை 2-வது வட்டம் மக்கள் முன்னேற்ற மன்ற நிர்வாகிகள் தேர்தல், 18-6-72-ல் வட்டச் செயலாளர் கே. பி. பாண்டியன் தலைமையில் நடைபெற்றது; அதுபோது, தேர்ந்தெடுக்கப்பட்டோர் வருமாறு :—

தலைவர் : பி. சையத் பாட்சா; செயலாளர் : ஜே. மணி; துணைச் செயலாளர் : பி. சூரியப்பிரகாசம்; பொருளாளர் : ஆர். வரதன்; மற்றும் 7 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

இனாம்புலியூர் தி. மு. க.

திருச்சி வட்டம் இனாம்புலியூர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் திருச்சி வட்டச் செயலாளர் மு. நடராசன் தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம் மா. சுப்பிரமணியன் கிளைக் கழகத்தின் அவைத் தலைவராகவும், கோ. நெடுமாறன் செயலாளராகவும், பொன். வைரவன் துணைச் செயலாளராகவும், வெ. வெங்கடாசலம் பொருளாளராகவும், நா. சுப்பையன் வட்டக் கழகப் பிரதிநிதியாகவும், மற்றும் 8 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வருந்துகிறோம்

சென்னை 2-வது வட்ட தி. மு. க. தொண்டரும் மக்கள் முன்னேற்ற மன்ற உறுப்பினருமான இராதாகிருட்டினனின் மகன் சக்திவேல் 11—6—72 அன்று இயற்கையெய்தியமை குறித்து வருந்துவதுடன், அன்னார் குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த இரங்கல் மன்றத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

சென்னை 105-வது வட்டம் இராசுபிள்ளை தோட்டம் ஆலந்தூர் சின்னான் மன்றச் செயலாளர் எஸ். டி. பெருமாள் அவர்களின் தயார் 27—6—72-ல் இயற்கையெய்தியது குறித்து மேற்படி மன்றச் சார்பில் ஆழ்ந்த அனுதாபமும் ஆறுதலும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

வரலாற்றுச் சிறப்புமிக்க உடன்பாடு

இரு நாட்டுத் தலைவர்கட்கும் திருப்தி

சிம்லா, ஜூலை 3—

கடந்த ஐந்து நாட்களாகச் சிம்லாவில் இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா காந்தியும் — பாகிஸ்தான் அதிபர் ஜுல்பிகர் அலி பூட்டோவும் நடத்திய உச்சக்கட்டப் பேச்சுவார்த்தையில், இன்று (ஞாயிறு — திங்கள்) நள்ளிரவு 12.30 மணிக்கு உடன்பாடு ஏற்பட்டது; சமாதான உடன்படிக்கையில் இருவரும் கையெழுத்திட்டனர்.

இரு நாடுகளுக்குமிடையே உள்ள பிரச்சினைகளை மூன்றுவது நாட்டின் தலையீடு இல்லாமல் தாங்களே பேசித் தீர்த்துக்கொள்வதென்றும், பிரச்சினைகட்கும் பரிகாரம் காண்பதற்குப் படைபலத்தைப் பயன்படுத்துவதில்லை என்றும் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தானுடன் தீர்க்கப்படாமலிருக்கும் பிரச்சினைகளில் தீர்வு காண்பதற்கான சூழ்நிலையை உருவாக்க இந்த இரண்டு முக்கியமான கோட்பாடுகளையும் ஏற்க வேண்டுமென்று தொடக்கத்திலிருந்தே இந்தியா வலியுறுத்தி வந்தது; ஆகவே, இந்த உடன்படிக்கை இந்தியாவின் தரப்புக்கு அதிக வெற்றி என்று கருதப்படுகிறது.

பிரச்சினைகளை அணுகுவதில் இந்தியாவுக்கும் — பாகிஸ்தானுக்கும் இடையே அடிப்படையான வேறுபாடு முதலில் இருந்தது; 'எந்தவிதமான சமாதான உடன்படிக்கை அல்லது பிரகடனத்துக்கு முன், போர்க் கைதிகள் பற்றியும் — படைகள் திரும்பப் பெறப்படுவது பற்றியும் ஒரு திருப்திகரமான உடன்பாடு ஏற்பட வேண்டும்' என்பது பாகிஸ்தான் கோரிக்கை; இந்தியாவின் நிலை இதற்கு நேர் மாறானது; 'காஷ்மீர் உட்பட போர் நிறுத்தக்கோடு முழுவதையும் சர்வதேச எல்லையாக அறிவிக்க வேண்டும்' என்பது இந்தியாவின் கோரிக்கை; 'இதை இப்போது செய்ய முடியாவிட்டாலும், காஷ்மீர் பிரச்சினையையும் — மற்றப் பிரச்சினைகளையும் இருதரப்பினர் மட்டும் பேசி முடிவு செய்ய பாகிஸ்தான் ஒப்புக்கொள்ள வேண்டும்' என்று இந்தியா கோரியது; ஆனால், இந்த இரண்டு மாற்று யோசனைகளுக்குமே பூட்டோ இணங்கவில்லை,

"நாங்கள் கையொப்பமிட்டிருக்கும் உடன்படிக்கையால் இந்தியாவுக்கும் — பாகிஸ்தானுக்குமிடையே உள்ள உறவில் ஒரு புதிய அத்தியாயம் தொடங்கும்" என்று, இரு தலைவர்களும் கூறினர்.

"இந்த உடன்படிக்கை எனக்கு மனநிறைவை அளித்திருக்கிறது" என்று பூட்டோ கூறினர்.

"உச்சக் கட்டப் பேச்சுவார்த்தையில் ஓர் உடன்பாடு ஏற்பட்டிருப்பது எனக்கு மனநிறைவை அளித்திருக்கிறது" என்று இந்திரா காந்தியும் கூறினர்.

இந்த உடன்படிக்கையை இனி இரண்டு நாடுகளின் நாடாளுமன்றங்களும் அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது.

பாகிஸ்தான் நாடாளுமன்றம் ஆகஸ்டு மத்தியில் கூடி உடன்படிக்கையை அங்கீகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கையெழுத்திட்டவுடன் மிகுந்த உற்சாகத்துடன் வெளியே வந்த பூட்டோ, பத்திரிகையாளர்கள் கூறிய நல்வாழ்த்துக்களை ஏற்றுக்கொண்டார்; ஆனால், 'இன்று எந்தக் கேள்விக்கும் நான் பதில் அளிக்க முடியாது' என்று அவர் கூறிவிட்டார்,

இனி இரண்டாவது உச்சக்கட்டப் பேச்சு பாகிஸ்தானில் விரைவில் நடைபெறும்; அப்போது காஷ்மீர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பது பற்றியும் — பாகிஸ்தான் போர்க் கைதிகள் பற்றியும் விவாதிக்கப்படும்.

அந்த உச்சக்கட்டப் பேச்சுக்காக இந்திரா காந்தி பாகிஸ்தானுக்குச் செல்வதற்குமுன் இஸ்லாமாபாத் வங்காள தேசத்தை அங்கீகரிக்கும் என்றும், ஆகவே போர்க் கைதிகளின் பிரச்சினையில் தீர்வு காண்பது எளிதாகிவிடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

வரலாற்றுப் புகழ்மிக்க இந்த உடன்படிக்கையின் காரணமாக, மேற்குப் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ள போர்க் கைதிகளையெல்லாம் இந்தியா விடுதலை செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இராஜஸ்தான், பஞ்சாப் எல்லைகளையொட்டிய பாகிஸ்தான் பகுதிகளில் இந்தியப் படைகள் பிடித்துள்ள இடங்களிலிருந்து நமது படையினர் திரும்பப் பெறப்படுவர்; ஆனால் ஜம்மு — காஷ்மீர் பகுதிகளுக்கு இது பொருந்தாது.

கோவையில் கம்யூனிஸ்டுகளின் வெறியாட்டம்

கழகத் தோழர்களை வழிமறித்துத் தாக்கினர்

கோவை, ஜூலை 3—

கோவையில் நேற்று நடைபெற்ற கொள்கை விளக்கப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகத் திருப்பூரிலிருந்து கழகத் தோழர்கள் லாரி ஒன்றில் வந்தபோது அவினாசி சாலையில் சின்னியம்பாளையம் அருகே வலது கம்யூனிஸ்டுக் காலிகள் பலர் அவர்களை வழிமறித்துத் தாக்கினார்கள்.

கூட்டத்திற்குப் போகாமல் கழகத் தோழர்களைத் திரும்பிப்போகும்படி அவர்கள்மீது வன்முறைத் தாக்குதல் நடத்தினர்.

இதனால் மூன்று தோழர்கள் படுகாயமடைந்திருக்கின்றனர்.

லாரியில் வந்தவர்களில் 11 பேரைக் காணவில்லை; இவர்களைத் தேடும் முயற்சியில் காவல் துறையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

படுகாயமுற்ற தோழர்கள் மூவரும் சிகிச்சை பெற மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

பொய் மொழிகளால் — புரட்டுச் செய்திகளால் எங்களை அழித்துவிட இயலாது

வஞ்சகப் போக்கு அவர்களையே ஒருநாள் விழுங்கிவிடும்

சென்னை, ஜூலை 3—

"இன்றையத்தினம், நாம் பேசாதவைகளைக் கூடப் பேசியதாக வெளியிடும் சிலர் இருக்கிறார்கள்; கடந்த 25-ந் தேதியன்று வீரன் பிரதாப் சந்திரன் நினைவு நாள் கூட்டத்தில் நானும் — மதுரை முத்துவும் — கழக முன்னணியினரும் பேசினோம்; அப்போது மதுரை முத்து — கோகலே மண்டபத்தில் ஒரு கம்யூனிஸ்டுத் தலைவர் 'கத்திக்குக் கத்தி; குத்துக்குக் குத்து' என்று பேசியதைச் சுட்டிக்காட்டி — 'கத்திக்குக் கத்தி — குத்துக்குக் குத்து என்பது உனக்கு மட்டும்தான் தெரியுமா? நீ அதைச் செய்கின்ற வரையில் எங்கள் கை பூவா பறித்துக் கொண்டிருக்கும்' என்று கேட்டார்.

அதற்குப் பின்னர் பேசிய நான், 'மதுரை முத்து பேசிய அந்த அளவுக்குச் செல்லவேண்டியதில்லை — அந்த அளவு வேகம் காட்டத் தேவையில்லை; என்னுடைய வழி — அண்ணா வழி; நம்முடைய வழி — அண்ணா வழி' என்று கூறினேன்.

அப்போது கூட்டத்திலிருந்த ஆத்திரம்கொண்ட தோழர்கள் என் பேச்சை இடைமறித்து, 'வழி சொல்லுங்கள் — எங்களுக்கு வழி சொல்லுங்கள்' என்று குரல் எழுப்பினார்கள்.

அதற்கு நான், 'நாடு வாழ — நாட்டு மக்கள் வாழ பலாத்காரம்தான் வழி என்று நீங்கள் அனைவரும் முடிவெடுப்பீர்களானால், முதலமைச்சர் பதவியை வீசி எறிந்துவிட்டு வரத் தயாராக இருக்கிறேன்; ஆனால் அது, நமது வழியல்ல — அது நமது அண்ணா வழியல்ல — அது நாம் மேற்கொண்ட வழியுமல்ல — நாம் மேற்கொள்ளப் போகின்ற வழியும் அல்ல' என்று விளக்கிக் கூறினேன்.

ஆனால், எனது பேச்சில் முற்பகுதியையும் விட்டுவிட்டு — பிற்பகுதியையும் விட்டுவிட்டு, பலாத்காரத்திற்கு நான் தலைமை ஏற்கப் போவதாகச் செய்தி வெளியிட்டார்கள் — சிலர்!

கேவலம் — பிழைப்பிற்காகப் பொய் சொல்லித் திரிகின்ற பிழைப்பும் ஒரு பிழைப்பா? அவர்களுடைய துரோகம் அவர்களுக்கு நீண்டநாள் சோறு போடாது — அவர்களுடைய வஞ்சகம் அவர்களுக்கு நீண்டநாள் பஞ்சு மெத்தை ஆகாது — அவர்களது பொய்யும் புரட்டும் அவர்களையே ஒருநாள் விழுங்கிவிடும்!

பொய் மொழிகளால் — புரட்டுச் செய்திகளால் — இழிமொழிகளால் எங்களை அழித்துவிட முடியுமா? 1971-ஆம் ஆண்டுத் தேர்தலில் நாங்கள் சந்திக்காதவைகளா?"

— முதலமைச்சர் கலைஞர்

(கொள்கை விளக்கக் கூட்டத்தில்)

பக்தவத்சலம் 'பாணி'யில் பதில் சொல்லமாட்டோம்!

'முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம், இன்றைய மாநில அரசே பலாத்காரத்தைத் தூண்டிவிடுகிறது' என்ற ஒரு குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

1965-ம் ஆண்டில், 'இந்தி திணிக்கப்படும் நாள் — சனவரி 25 என்று குறிக்கப்பட்டது; அப்போது அறிஞர் அண்ணா அவர்கள்' 'கழகத் தோழர்களே — கறுப்புக் கொடி ஏற்றுங்கள்; அமைதியான முறையில், உங்களது சொந்த வீடுகள் — சொந்த அலுவலகங்களில் கறுப்புக் கொடி ஏற்றுங்கள்' என்று அறிக்கை விடுத்திருந்தார்கள்.

அப்போது முதலமைச்சராக இருந்த பக்தவத்சலம், சட்டமன்றத்தில், 'குடியரசு நாளில் இப்படிக் கறுப்புக் கொடி ஏற்றலாமா?' என்று கேட்டார்; அதோடு விடவில்லை — 'இதனால் அசம்பாவிதங்கள் ஏற்படும்' என்றும் கூறினர்.

'சொந்த இல்லங்களில் — சொந்த அலுவலகங்களில் கறுப்புக் கொடி ஏற்றினால் அசம்பாவிதம் எப்படி ஏற்படும்' என்று நாவலர் விளக்கம் கேட்டார்.

'அமைதியான முறையில் கறுப்புக் கொடி கட்டுமாறு எங்கள் கழகம் அறிக்கை விட்டிருக்கிறதே — அசம்பாவிதத்திற்கு இடமே இல்லையே — எங்கள் வீடுகளில் கொடி ஏற்றுவது தவறு — நீங்கள் அதை எப்படித் தடுக்கப் போகிறீர்கள்?' என்று நான் கேட்டேன்.

உடனே, முதலமைச்சராக இருந்த பக்தவத்சலம், 'யார் வீட்டில் கறுப்புக் கொடி ஏற்றப்பட்டாலும் அதைப் பொதுமக்கள் பார்த்துக் கொள்வார்கள்' என்று கூறினர்; சட்டமன்றக் குறிப்பேட்டில் இது பதிவாகியிருக்கிறது; எல்லாவற்றையும் மறுப்பதுபோல் இதையும் அவரால் மறுக்க முடியாது; ஏனெனில் இது சட்டமன்றக் குறிப்பேட்டில் இருக்கிறது.

பொதுமக்கள் பார்த்துக்கொள்வார்கள் என்றால் என்ன பொருள் — போலீசு தலையிடாது; காலித்தனம் செய்வோர் தலையிடுவோர்கள்; அமளி உண்டாக்குவார்கள்' எனும் பொருளில்தான் முதலமைச்சராக இருந்த பக்தவத்சலம் அன்று கூறினர்.

அப்போது என்ன நடந்தது — 'முரசொலி' அலுவலகத்தில் கறுப்புக் கொடி ஏற்றப்பட்டது; காலிகள் 'முரசொலி' அலுவலகத்தைச் சுற்றி வந்து தாக்கினார்கள்; 'கொடியை முறித்துக் கீழே போடுவோம்' என்று மிரட்டினார்கள்.

இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர். இல்லத்தில் ஏற்றப்பட்ட கறுப்புக் கொடியைக் கண்ட வன்முறையாளர்கள், அவரது இல்லத்தைச் சுற்றிச் சுற்றி வந்து கலாம் விளைவித்தார்கள் — குழந்தை குட்டிகளைப் பயமுறுத்தினார்கள்!

இலட்சிய நடிகர் பலமுறை பக்தவத்சலத்திற்குப் 'போன்' செய்தார்; நான் என்ன செய்ய — நான் என்ன செய்ய' என்றுதான் பக்தவத்சலம் கூறினாரே தவிர, போலீசு உதவி வரவில்லை; வன்முறையாளர்களின் அட்டகாசம் அதிகமாயிற்று; கடைசியில் என்ன நடந்தது — இலட்சிய நடிகர் இராசேந்திரன்மீதுதான் அரசாங்கம் வழக்குத் தொடர்ந்தது!

அப்படியோர் ஆட்சி நடத்திய பக்தவத்சலம்தான் இன்று நம்மீது குறைகூறுகிறார்! என்றாலும், அந்தப் பக்தவத்சலம் 'பாணி'யில் நாம் பதில் சொல்ல மாட்டோம்!"

— முதலமைச்சர் கலைஞர்

எந்த போராட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைக்கு நாம் ஏற்றியிருக்கின்ற மின் கட்டணம், ஒரு காசுதான்; அவர்களுக்கு, 'காசு ஒன்றா இரண்டா' என்பதல்ல பிரச்சினை; விநாயகம் பாணியில் — ஆங்கில முறையில் சொல்ல வேண்டுமானால், அவர்களுக்கு ஏதாவது ஒரு 'Cause' வேண்டும்; அதை வைத்துக் கொண்டு, 'தி. மு. கழகத்தை எப்படி எதிர்ப்பது — அரசுக்குத் தொல்லை தருவது - சட்டம், ஒழுங்கு, அமைதி காப்பாற்றப்படவில்லை' என்று டில்லிக்குத் தந்தி தருவதில் அக்கறையோடு இருக்கிறார்கள்.

அவர்கள் நடத்துகின்ற கிளர்ச்சிகளின் காரணமாக ஓரிரு இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெறக் கூடாது; அப்படியே — வாதத்திற்காகச் சொல்கிறேன் — துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றுவிடுமானால், அதையே இந்த அரசைக் கவிழ்க்கப் போதுமான காரணமாகிவிடும் என்று அவர்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்களா?

1952-ம் ஆண்டில் நாற்பது நாட்கள் தொடர்ந்து முதுகுளத்தூர் சீமையில் துப்பாக்கிப் பிரயோகமும் — தடியடியும் நடைபெற்று, வயல்வெளியில் — வாய்க்கால்களில் — வைக்கோல் போர்களில் நூற்றுக்கு மேற்பட்ட பிணங்கள் வீழ்ந்ததே — அப்போது காமராசருடைய ஆட்சி கவிழ்ந்ததா?

இப்படி அசம்பாவிதங்களை நடத்தி ஒரு ஆட்சியைக் கவிழ்த்துவிடலாம் என்று யாராவது கருதினால் அவர்கள் தங்கள் கனவு கலைந்து விழித்துக்கொள்ள வேண்டுமென்று வினயமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்நாட்டிற்கு அடுத்தபடியாக வரும் மாநிலம் மாராட்டிரம்; இம்மாநிலத்தில் 4.82 இலட்சம் ஏக்கரில் பூச்சி மருந்து தெளிக்கப்பட்டிருக்கிறது.

1972—73-ம் ஆண்டில் தமிழ்நாட்டில் ரூ. 4.79 கோடி செலவில் 21.75 ஏக்கரில் பூச்சி மருந்து தெளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அறிவகம் அச்சகத்தில் (24, [illegible] செங்கழுநீர் தெரு, சென்னை-10) [illegible] வெளியிடப்படுகிறது.